<u>**சார்பு நீதிமன்றம், அரூர்**</u>

<u>**நாள் – 03.03.2026**</u>

**OS.173/2021**

**வா.சா.1 திரு.கிருஷ்ணன்**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

<u>**1, 2ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. நான் ஓய்வு பெற்ற ஆசிரியர் என்று சொன்னால் சரிதான். எனது அப்பா பெயர் என்ன என்றால் நடுப்பையன் என்கின்ற சின்னபையன். எனது தந்தை உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை, அவர் இறந்துவிட்டார். எனது தயார் பெயர் என்ன என்றால் மாரியம்மாள். அவர் உயிருடன் உள்ளாரா என்றால் அவரும் உயிருடன் இல்லை. எனது தயாரின் அப்பா பெயர் என்ன என்றால் வேடியப்பன். எனது அப்பா பெயர் எந்த காலத்திலும் வேடியப்பன் இல்லை என்றால் சரிதான். எனது அப்பாவின் அப்பா பெயர் என்ன என்றால் புருடையன். எனது தாத்தா பெயரில் நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் பட்டா வழுங்கியதாக சொல்லியுள்ளேன் அந்த பட்டாவை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

2. இந்த வழக்கில் உள்ள நிலத்தின் சர்வே எண் என்ன என்றால் 275/3. நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மாரியம்மாள் பெயரில் தாவா சொத்திற்கு பட்டா வழங்கியதாக சொல்லுவதற்கு பட்டா நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. பட்டா வழங்கும்போது நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மாரியம்மாள் என்பவருக்கு பட்டா வழங்கும்போது

கணவர் பெயர் நடுப்பையன் என்கின்ற சின்னபையன் என்பதற்கு பதிலாக வேடியப்பன் என தவறுதலாக போடப்பட்டதாக சொல்லியுள்ளேன் அது பட்டா வழங்கும்போதே தெரியுமா என்றால் அப்போது நான் சிறுபையனாக இருந்தேன் அதனால் தெரியாது. நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் பட்டா வழங்கியது 1986ம் வருடம் என்றால் சரிதான். 1986 ல் நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் பட்டா வழங்கியபோது நான் என்ன படித்துக்கொண்டிருந்தேன் என்றால் பட்டபடிப்பு படித்துக்கொண்டிருந்தேன். அவ்வாறு பட்டா வழங்கியது நான் பட்டபடிப்பு படித்து கொண்டிருந்ததால் நன்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது.

3. எனக்கு வழக்கு படியும், வாக்குமூலத்தின்படியும் தவறாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று எனக்கு எப்போது தெரியும் என்றால் 2007ம் ஆண்டில் தெரியும். 2007ல் எனக்கு எனது தாயாரின் கணவர் பெயர் தவறாக பட்டாவில் போட்டு கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரிந்தவுடன் அதனை நீக்க நான் ஏதாவது வருவாய் துறையில் மனு கொடுத்தேனா என்றால் இல்லை. எனது சகோதரர் ராஜி படித்தவர் என்றால் அவர் படிக்கவில்லை. நானும், எனது சகோதரர் ராஜிம் சுமூகமான உறவில் தான் உள்ளோம் என்றால் சரிதான். எனது தயார் எந்த தேதியில் இறந்தார் என்றால் 14.02.1988ல் இறந்தார். நான் தாக்கல் செய்துள்ள எனது தயாரின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.2ல் எனது தயாரின் கணவர் பெயர் நடுப்பையன் என்று மட்டும்தான் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் எனது தயாரின் கணவர் பெயர் சின்னப்பையன் என்பது குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

எனது தயாரின் பெயர் வா.சா.ஆ.2ல் மாரி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், உண்மையான பெயர் அதில் குறிப்பிடவில்லை.

4. எனது தயாருக்கு வாரிசு சான்றிதழ் பெற்றோமா என்றால் பெற்றோம். வா.சா.ஆ.2 இறப்பு சான்றிதழை அனுசரித்து தான் வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.3 பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாரிசு சான்றிதழ் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு கொஞ்சநாள் முன்புதான் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வாரிசு சான்றிதழில் எனது தாயாரின் பெயர் மாரி என்கின்ற மாரியம்மாள் என்றும், அவரது கணவர் பெயர் நடுப்பையன் என்கின்ற சின்னபையன் என்றும் எங்களுடைய வசதிக்காக விண்ணப்பம் கொடுத்து சான்றிதழ் பெற்றுக்கொண்டோம் என்றால் இல்லை.

5. தாவா சொத்து எவ்வளவு பரப்பு என்றால் 3 ஏக்கர். எனது தயார் 1988ல் இறந்ததும் அந்த சொத்திற்கு வாரிசு என எங்கள் பெயரை பட்டாவில் சேர்க்கப்பட்டதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கணினி சிட்டாவில் A.D.வேடியப்பன் மனைவி மாரியம்மாள் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும், பிரதிவாதியும் ஒரே ஊர், ஒரே சமூதாயத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதிதிராவிடருக்காக நிபந்தனையுடன் ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். நாங்களும், 1, 2 பிரதிவாதிகளும் ஆதிதிராவிடர் வகுப்பை சார்ந்தவர்கள்தான் என்றால் சரிதான்.

6. 1ம் பிரதிவாதி சக்திவேலுக்கும் எனக்கு என்ன பிரச்சனை என்றால் அவருக்கும் எனக்கும் எந்த பிரச்சனையும் கிடையாது, அவருக்கு நிலமே

கிடையாது. சக்திவேலின் பாட்டி பெயர் மாரியம்மாள் என்றால் சரியல்ல, அவர் பெயர் மாரி. 1ம் பிரதிவாதியின் பாட்டி பெயர் மாரியம்மாள் என்பது தான் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் பாட்டியின் கணவர் பெயர் வேடியப்பன் என்றால் சரிதான், அவரை குள்ள வேடியப்பன் என்றும் கூப்பிடுவார்கள். மாரியம்மாள், சக்திவேல், திருப்பதி எல்லாம் வசதி வாய்ப்பு இல்லாத படிப்பறிவு இல்லாத கூலிவேலை செய்பவர்கள் என்றால் சரிதான். மாரியம்மாள், சக்திவேல், திருப்பதி எல்லாம் கூலிவேலைக்காக வெளியூர் சென்று அங்கேயே தங்கி வேலைசெய்து வருபவர்கள் என்றால் சரிதான்.

7. வழக்கு சொத்திற்கு 3 பக்கமும் எங்கள் நிலம் உள்ளது என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்திற்கு போகவர தனிப்பட்ட ரோடு வசதி இல்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு 3 பக்கமும் எங்கள் நிலம் இருப்பதால்தாவா சொத்தையும் சேர்த்து கடந்த 7, 8 வருடமாக நாங்கள் தான் ஓட்டிவருகிறோம் என்றால் இல்லை, எனக்கு 68 வருடம் ஆகிறது எனது சிறுவயதில் இருந்தே நாங்கள் தான் அந்த நிலத்தை ஓட்டிவருகிறோம். தாவா சொத்தை பொறுத்து எனது தகப்பனார் நிலத்திற்கு கந்தாயம் கட்டிய ரசீது ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு எனது பெயரில் கந்தாயம் கட்டியதற்கான ரசீது ஏதாவது உள்ளதா என்றால் உள்ளது. என் பெயரில் கட்டிய கந்தாய ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை எனக்கு விவரம் தெரிந்த நாள்முதல்

நாங்கள் தான் சொத்தை அனுபவம் செய்து வருகிறோம் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8. தாவா சொத்து 1ம் பிரதிவாதி மாரியம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து, தாவா சொத்திற்கு எந்த விதமான மூல உரிமை ஆவண்ங்களும் இல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. 1989ல் எங்கள் கிராமத்தில் தீ விபத்து ஏற்பட்டதாகவும் அதில் 15 வீடுகள் எரிந்துவிட்டதாகவும் அதில் எங்களது வீடும் எரிந்து உடைமைகள் மற்றும் நிலஉரிமை பதிவேட்டு ஆவணங்கள் எரிந்துவிட்டதாக எனது தாவா மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன், இது சம்மந்தமாக முதல் தகவல் அறிக்கையோ, அல்லது தீ அணைப்புத்துறை வழங்கிய ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.03 16:56:03 +0530